www.padippakam.com


# தலைவி

இணைந்த கரங்கள்
பெண்கள் விழிப்புணர்ச்சி
இணையங்களின் ஒன்றியம்
செய்திமடல்

செங்கோல் 2 மன்றம் 8 ஜூன் 2004


## தலைவியின் பார்வையில்............

மே மாதம் 2004ம் ஆண்டு உலகத்துக்கே வழி காட்டும் வகையில் இந்திய வாக்காளப் பெருமக்கள் நடந்து கொண்டார்கள். ஆம், ஒரு இத்தாலிய நாட்டு வெள்ளைக்காரப் பெண்ணை தங்கள் நாட்டின் அதி உயர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தனர். திருமதி சோனியா காந்தி அப்பதவியை ஈற்றில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இந்திய மக்களின் தீர்ப்பு காத்திரமான தீர்ப்பாக அமைந்துவிட்டது. பௌத்தர் என்றும் இந்து என்றும் கிறிஸ்தவர் என்றும் முஸ்லிம் என்றும் சிங்களவன் என்றும் தமிழன் என்றும் யாழ்ப்பாணத்தான் என்றும் மட்டக்களப்பான் என்றும் கண்டி முஸ்லிம் என்றும் கிழக்கு முஸ்லிம் என்றும் வடக்கு முஸ்லிம் என்றும் மேல் மாகாணத்துத் தமிழன் என்றும் மலையகத்துத் தமிழன் என்றும் தென் மாகாணச் சிங்களவன் என்றும் மலை நாட்டுச் சிங்களவன் என்றும் எங்கள் தேர்தல்களில் நாங்கள் அடிபட்டுக்கொண்டு கிடக்க.. ஆகா! ஆகா! மானிடத்தை வலியுறுத்தும் பாடத்தை எங்களுக்கு கற்றுத் தந்தனர் இந்திய மக்கள்.

மகாத்மா காந்தி ஒரு அருமையான போதனையைச் சொன்னார். "ஒரு கருத்து சரியா பிழையா என்று உரைத்துப் பார்க்க நீ விரும்பினால் அக்கொள்கையை உலகத்திலுள்ள எல்லோரும் கைக்கொண்டால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பார். உலகமே அக்கொள்கையை ஒரு பிரச்சனையும் இல்லாமல் கைக்கொள்ளலாம் என்று கண்டாயானால் உனது கருத்து சரி என்று எடுத்துக் கொள்ளலாம். உலகத்தினர் கைக்கொண்டால் வேறு பலருக்கு அநியாயம் இழைக்கப்படுகின்றது என்று நீ கண்டு கொண்டாயெனில் உனது கருத்து தவறென்று இலகுவில் புரிந்து கொள்ளலாம்" என்றார்.

யாழ்ப்பாணத்தார் தான் யாழ்ப்பாணத்துக்கு சேவை செய்யலாம், அங்கு பதவி வகிக்கலாம் என்றால், மட்டக்களப்பார்தான் மட்டக் களப்புக்கு சேவை செய்யலாம் அங்கு பதவி வகிக்கலாம் என்றால், முஸ்லிம்கள்தான் முஸ்லிம்களுக்குச் சேவை புரியலாம் அவர்கள் மத்தியில் பதவி வகிக்கலாம் என்றால், சிங்களவர்கள்தாம் சிங்களவர்களுக்கு சேவை செய்யலாம் அவர்கள் மத்தியில் பதவி வகிக்கலாம் என்றால்.......நாங்கள் ஒருவரும் எங்கள் ஊரை விட்டு வேறெங்கும் காலடி எடுத்து வைக்க முடியாதே. தென்பகுதியில் உள்ள தமிழ் பேசும் வர்க்கத்தினரை சிங்களவர்கள் விரட்டியடிக்க வேண்டுமே.

அப்படியானால் இங்கிலாந்து கனடா போன்ற நாடுகளில் அங்கு புலம் பெயர்ந்து சென்ற தமிழர் இன்று பலவிடங்களில் அங்குள்ள நகர சபைகளிலும் பாராளுமன்றத்திலும் அங்கத்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களே, அந்த நிகழ்வுகளை நாம் ஏன் வரவேற்கின்றோம்? கனடாவில் பாராளுமன்றத்து அங்கத்தவராக வெள்ளைக் கனடியர்தாம் இருக்கலாம் என்று நாம் ஏன் சொல்லுவதில்லை. அதைவிட்டு இலங்கைத் தமிழன் அங்கு கால் பதித்து விட்டான் என்று தலையில் வைத்துக் கூத்தாடுகின்றோமே. எத்தனை வருடங்கள் கனடாவில் இருந்தாலும், எவ்வளவு சேவைகள் அந்த நாட்டுக்கு செய்திருந்தாலும் கனடியப் பாராளுமன்றத்தில் கறுப்பர் எங்களுக்குப் பிரதிநிதியாக இருக்கக் கூடாது என்று அந்த வெள்ளையர் சொன்னால் 'அது நியாயந்தான்' என்று ஒத்துக் கொள்வோமா என்ன.

அது மட்டுமல்ல. கனடாவில் வாழும் ஒரு இலங்கைத் தமிழ் சிறுவன் சிறந்த முறையில் கோல்ஃப் ஆடுவதைக் கண்டு சர்வதேச விளையாட்டுக்களில் அவன் கனடாவைப் பிரதிநிதித்துவப் படுத்தவும் விடப்பட்டிருக்கின்றது! இந்தச் செய்தியால் எங்களுடைய ஊடகங்கள் அடைந்த புளகாங்கிதத்துக்கு அளவில்லை. 'இல்லை யில்லை இவர் விளையாடவேண்டுமென்றால் யாழ்ப்பாணம்தான் போக வேண்டும்' என்று அந்த நாடு சொல்லவில்லை. சொல்லியிருந்தால் கறுப்பினத்தை ஒதுக்கும் கொள்கை அது இது என்று என்று நாங்கள் ஒப்பாரி வைத்துத் தள்ளியிருப்போமே. ஏன் எங்களுக்கு இந்த இரட்டை வேஷம்? மனிதா மனிதா எப்போது நீ திருந்துவாய்?

ஆம் மனிதரைத் திருத்தத்தான் இந்திய மக்கள் பாடம் படிப்பித்திருக்கிறார்கள். மனிதரை அதாகவும் இதாகவும் பார்க்காமல் மனிதராகப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள். தாம் விரும்பிய இடத்தில் விரும்பிய முறையில் தமது சேவையை வழங்கவும், பிரதிநிதித்துவம் செய்யவும், பதவிகள் வகிக்கவும் சகலருக்கும் அடிப்படை உரிமைகள் இருக்கின்றன என்று ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்குரிய பண்புத்தரம் ஒன்றே அதற்கான தகுதி என்று தெட்டத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

குறுகிய இனவாதத்தினால் கட்டுப்பட்டிருக்கும் இந்திய உயர் வர்க்கம் இதனால் ஆடித்தான் போயிருக்கின்றது. இத்தாலியப் பெண்ணாக இருந்தால் என்ன, எங்கள் நாட்டின் தலைவியாக அவளுக்குத் தகுதியிருந்தால் அவளை நாம் ஏற்போம் என்று இந்திய பாமர மக்கள் சந்தேகமறச் சொல்லியிருக்கிறார்கள். "சோனியா காந்தி இத்தாலியப்பெண் இத்தாலியப்பெண்" என்று எதிர்க்கட்சியினரின் பிரச்சாரமெல்லாமே அதில் தொங்கிக் கொண்டிருக்க, பலவிடங்களில், குறிப்பாகத் தமிழ் நாட்டில்! மக்கள் இவ்விதமான கீழ்த்தரமான பிரச்சாரங்களை உறுதியாக நிராகரித்திருக்கிறார்கள்.

அது மட்டுமா? பாரதீய ஜனதா கட்சியின் இனவாதக் கொள்கைகளை அவர்கள் நிராகரித்தார்கள். நகர்ப்புற படித்த வர்க்கத்தினருக்கு மட்டுமே அபிவிருத்தி கொண்டுவரும் மேல் வர்க்கத்தினரின் பொருளாதாரக் கொள்கைகளை நிராகரித்தார்கள். இடது சாரிக் கட்சிகள்கூட இத்தேர்தல்களில் பாரிய வெற்றி ஈட்டினர். அவர்கள் இந்தியக் கட்சிகளின் கண்களை மட்டும் திறக்கவில்லை, எங்களெல்லோருடைய கண்களையும்தான் திறந்து விட்டனர்.

வாழ்க பாரத மணித்திருநாடு!

**பெண்களின் எழுச்சி! சமூகத்தின் உயர்ச்சி!**

வாழ்த்துக்களுடன்,
ஆசிரியர்

*தலைவிக்கான ஆக்கங்களும் கடிதங்களும் ஒவ்வொரு மாதத்தின் 10ந்தேதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.*

படிப்பகம்

www.padippakam.com



# பிரதேசவாதம் பற்றித் தலைவிக்குச் சில விளக்கங்கள்

யாழ் மட்டக்களப்பு பிரதேசவாதம் பற்றி தலைவி கடந்த இரு இதழ்களில் சுமந்துவரும் கட்டுரைகளை சுவாரசியத்துடன் படித்தேன். தலைவி இந்தப் பக்கமா அந்தப் பக்கமா என்று தெரியாத குழப்ப நிலை. ஆனாலும் இதனூடாக இரு சாராருக்கும் பாலமாகத் தலைவி நிற்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தக் காலகட்டத்தில் வேறெவரும் செய்யாத உங்கள் பணி மென்மேலும் வளரட்டும்.

பிரதேசவாதம் பற்றி எனக்கும் ஒரு கோணம் சார்ந்த சில கருத்துக்கள் உண்டு, பிரதானமாக, மட்டக்களப்பு யாழ்ப்பாணம் என்ற 'பிரதேசத்தின்வாதம்' இது இல்லை. மாறாக, இது ஒரு வர்க்கப்போராட்டமாகும். என்பதே அந்தக் கருத்தாகும். யாழ் உயர் குடி மக்கள் தங்கள் ஊர்களிலேயே உள்ள சிறுபான்மைத் தமிழ் சகோதரரை எவ்வாறு பாவித்தார்களோ அவ்வாறே மட்டக்களப்பிலுள்ள தமிழரையும் பாவித்தார்கள். அதுதான் உள்ளார்ந்த பிரச்சனை. அது வேறு இது வேறு அல்ல என்பதால்தான் இதனை வர்க்கப் போராட்டம் என்கின்றேன்.

**ஆயுதபாணியல்லாத, அல்லது ஆயுதம் ஏந்தாத பொது மக்கள் எந்தக் காரணம் கொண்டும் ஒருக்காலும் கொலை செய்யப் படக்கூடாது என்று நாங்கள் ஆக்ரோஷப்பட வேண்டும்.**

ஆறுமுகநாவலர் சைவப் பாரம்பரியங்களின் மறுமலர்ச்சிக்காக உழைத்தபோது அவர் வேதாகமப் பாரம்பரியங்களுக்குக் கொடுத்த மதிப்பை எங்கள் மட்டக்களப்பின் கண்ணகையம்மன் பண்பாட்டுக்குக் கொடுக்கவில்லை. அதை ஒரு பொருட்டாகவே அவர் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. அவர் ஒரு நூறு தரம் இந்தியாவுக்குப் போய் வந்திருப்பார், ஆனால் ஒரு தடவையாவது மட்டக்களப்புக்கு வந்தாரா? விபுலானந்தர் மட்டக்களப்பு தந்த உலகத்தரம் வாய்ந்த அறிஞர். அப்படியானவர்கள் இங்கிருந்தும் விவேகானந்தர் இலங்கைக்கு வந்திருந்தபோது கொழும்புக்குச் சென்றார், கண்டிக்குச் சென்றார், மாத்தளைக்குச் சென்றார், யாழ்ப்பாணத்துக்குச் சென்றார், ஆனால் மட்டக்களப்புக்கு வரவில்லை. இப்படி பல நூறு உதாரணங்களைக் காட்டலாம். மட்டக்களப்பு மக்கள் வேடர் வழிவந்த வர்கள்தானே என்கின்ற உணர்வு முன்னர் யாழ்ப்பாணத்தில் மேலோங்கி யிருந்ததை நாம் மறுக்க இயலாது. ஏன், மட்டக்களப்பிலேயே தங்கள் பிரதேசத்துக்காகப் 'போராடி' வந்த எங்கள் உயர் வர்க்கப் பிரதிநிதிகள் எல்லாரும் தாங்கள் எங்கே கல்யாணம் முடித்தார்கள்?, தங்கள் பிள்ளைகளை எங்கே கல்யாணம் செய்து கொடுத்தார்கள்? யாழ்ப்பாணத்திலல்லவா? இதுதான் நான் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றேன். இது ஒன்றும் பிரதேசப் பிரச்சனை அல்ல. எங்கும் எப்பொழுதும் காணப்படுகின்ற வர்க்கப் பிரச்சனையாகும், அநியாயமாக அதற்கு பிரதேச முலாம் பூசி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் பிற ஊர்களில் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் எங்கும் எவ்வளவு காலம் இருந்தாலும் தமது ஊர்களின், சாதிகளின் கட்டுப்பாட்டுக்கு அமையத்தானே இருக்கிறார்கள். தமது பிள்ளைகளைப் படிப்பித்தபின் தமது சாதிக்குள்ளே தானே மணம் முடித்து வைக்கின்றனர்? எங்கிருந்தாலும் தமது கடைகளில் இருக்கும் ஒரு சிற்றூழியனைக்கூட தனது ஊர்க்காரனாகத்தானே வேலைக்கு எடுக்கின்றனர்? அவர்கள் மெய் மெய்யாக தாம் இருக்கும் ஊருடன் ஒட்டுகின்றார்களாவென்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதுவும் பிரதேசவாதத்துக்கு ஒரு காலாக அமைந்து விட்டது. இதைப் பற்றி யாழ்ப்பாணத்தவர்கள் [illegible] செய்து கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

இன்று மட்டக்களப்பை மிகவும் நேசித்து வந்த இருவரை நாம் இழந்து நிற்கின்றோம். ஒன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் தம்பையா அவர்கள், மற்றவர் பத்திரிகையாளர் நெல்லை நடேசன் அவர்கள். வருடக்கணக்காக மட்டக்களப்பிலேயே வாழ்ந்து, அங்கேயே மணம் முடித்து, அந்த மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட இவர்களின் இறுதிக் கிரியைகள் இந்த மண்ணிலல்லவா நடந்திருக்க வேண்டும்? இவர்களின் சிதையை ஏன் திரும்ப வடக்குக்குக் கொண்டு போனார்கள்? இதன்மூலம் இவர்கள் நமக்குக் கூறுவது என்ன? அது என்னதான் செய்தாலும் மட்டக்களப்பான் மட்டக்களப்பான்தான் யாழ்ப்பாணத்தான் யாழ்ப்பாணத்தான் தான் என்றா? எல்லாவற்றையும் மறந்து ஒற்றுமையாக இருங்கள் என்று கூறுபவர்களெல்லாரும் தங்களைத் தாங்களே கேட்க வேண்டிய கேள்வி இது.

ஆகவே இந்த மட்டக்களப்பு யாழ்ப்பாணம் என்கின்ற உணர்வு ஒரு நாளும் போகாது, தீராது. வர்க்கப் போராட்டம் எப்பொழுதாவது முடிவுக்கு வந்திருக்கின்றதா? இல்லையே. அதுபோலத்தான். சாதாரணமான நாட்கள் என்றால் நாங்கள் இரண்டு பேச்சுப் பேசி வாதம் செய்து இதை சமாளித்திருப்போம். ஆனால் இன்று இது அரசியலாக்கப்பட்டு அதனை துப்பாக்கி ஏந்துபவர்கள் பேசும் காலமாகிவிட்டது. அதனால்தான் செல்லும் திசை தெரியாமல் அந்தரிக்கின்றோம்.

இதெல்லாம் பழைய கதை. போனதெல்லாம் போகட்டும். இப்பொழுது நடப்பதைப் பார்ப்போம். சமூகத்துக்காக வாழ்ந்த மிகவும் பெறுமதியான உயிர்களை இழந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறு பெறுமதியான உயிர்கள் பறிபோவதிலிருந்தே விஷயம் கொஞ்சம் விளங்கவேண்டும். கருணாவின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் மட்டக்களப்பு இருக்கும்போது ஒரு பொதுமகனின் உயிரும் எடுக்கப்படவில்லை என்பதே உண்மை. ராஜன் சத்தியமூர்த்தி கொலை செய்யப்பட்டபோது கூட யாழ்ப்பாணத்த வரைப் போகச் சொல்லியிருந்தார்களே தவிர யாரையும் கொல்லவில்லை. அப்படியானால் இப்பொழுது இப்படுகொலைகளைப் புரிபவர்கள் யாராக இருக்கும் என்கின்ற கேள்வி எழுகின்ற தல்லவா?

அதைத்தான் நாங்கள் மூன்றாவது சக்தி என்று மறைமுகமாகக் குறிப்பிடுவோம். வடக்கு கிழக்கு இணைப்பைத் துண்டாடுவதற்கு இச்சக்தி முயல்கின்றது. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கின்றது. ஈழத் தமிழ் மக்களின் இருப்பு ஒருங்கிணைந்த தமிழ் தாயகத்தில்தான் இருக்கின்றது என்பது உண்மையானால் நாம் தமிழ் மக்கள் இதற்கு ஏதாவதொரு நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்.

முதலாவதாக, எந்தப் பொதுமகனின் கொலை நடந்தாலும் 'அவர் இந்தப் பக்கமாம் அதுதான் செய்தவையளாம்' என்றும் அல்லது 'அவர் ஏதாவது செய்திருக்க வேணும் இல்லாட்டி நடந்திருக்காதுதானே' என்றும் சொல்வதை நிறுத்த வேண்டும். நடக்கின்ற கொலைகளுக்கெல்லாம் நியாயம் கற்பித்துக் கொண்டு தமிழ் மக்கள் இருப்பதைப் பார்த்து எனது நெஞ்சு நோகின்றது.

ஆயுதபாணியல்லாத, அல்லது ஆயுதம் ஏந்தாத பொது மக்கள் எந்தக் காரணம் கொண்டும் ஒருக்காலும் கொலை செய்யப்படக்கூடாது என்று நாங்கள் ஆக்ரோஷப்படவேண்டும்.

ஆனால் எங்களைச் சுற்றி நடப்பதோ வேறு. ராஜன் சத்தியமூர்த்தி இறந்தால் நாம் ஒருவிதமாகவும் நெல்லை நடேசன் இறந்தால் இன்னொருவிதமாகவும் அல்லவா நடக்கின்றோம். அப்படியானால்.. ராஜனைக் கொன்றவர்கள் யார், நெல்லையைக் கொன்றவர்கள் யார் என்ற கேள்வி அல்லவா எழுகின்றது? தங்கச்சிகளே நீங்கள் சொல்லுங்கள், ஒன்று சரியான கொலை மற்றது பிழையான கொலை என்பதா? நாங்கள் கொள்ளுகின்ற அரசியல் நீதியான அரசியலாக இருக்க வேண்டும். அப்பட்டமான பக்கச் சார்பான அரசியலாகப் போனதேயென்றால் அது ஒருநாளும் நீடிக்காது. அப்படியான பக்கச் சார்பான அரசியலாகப் போகாமல் இருப்பதற்கு பொது மக்களாகிய நாங்கள் உறுதியாக சில நிலைப்பாடுகள் எடுத்து எமது அபிப்பிராயங்களைத் துணிந்து தெரிவிப்பதே ஒரே வழியாகும். அதை நாங்கள் செய்யத் தொடங்கினாலே போதும். நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பிடும் அடுத்த வழி தோன்றும். உங்கள் இணைந்த கரங்கள் பெண்கள் வலையமைப்பு இவ்வாறான அரசியல் மறுமலர்ச்சிக்கு வித்திடுமா?

**மீன் பாடும் தேனாட்டின் தமிழ்த் தேசியன், மட்டக்களப்பு.**

படிப்பகம்

www.padippakam.com



# செயலாற்றல் உள்ளவர்களை நேர்மையுடன் கண்டுபிடியுங்கள்

ஏப்ரல், மே மாத தலைவி சஞ்சிகைக்கு எமது அன்பார்ந்த நன்றிகள். மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பிரச்சினைகளை மேன்மையுடன் தாங்கி நின்றமையை வரவேற்கின்றோம். 'இதில் வாக்களித்தவர்களுக்கு நன்றிகள்', 'பெண் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு வாழ்த்து' எனும் தலைப்பில் ச. பாஸ்கரன் எழுதிய ஆக்கம் தொடர்பான விளக்கம் சிலவற்றை அவருக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். வடகிழக்கு ரீதியாக இரு பெண்களை தேர்தலில் நியமித்ததற்கு தமிழரசு கட்சிக்கு நன்றி கூறினீர்கள். உங்களுக்கு தெரியாதா இவர்களை தேர்தல் தளத்தில் நிறுத்தியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்று. அவர்களுக்கு உங்களுடைய பாராட்டு சென்றிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் சில நேரம் இவை தெரிந்தும் இதை சொல்ல மறந்து விட்டீர்களோ?

20வருடகாலயுத்தச் சூழ்நிலைக்குப் பிறகு 2002ம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டபோது இந்த சூழ்நிலை இவர்கள் இருவரையும் அரசியலில் நிறுத்துவதற்கு முதல் காரணமாக இருந்திருக்கின்றது. அதைச் செய்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர்கள் தான் என்பதை பாஸ்கரனுக்கு தெளிவு படுத்துகின்றேன். அதுவரைக்கும் நான் அறிந்த காலம் தொடக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியாக செயற்படும்போதும், வேறு தமிழ்க் கட்சிகளிலும் கூட பெண்கள் இணைக்கப்பட வேண்டும் என்பது வாய்ப்பேச்சின் மூலமாகவே இருந்ததேயொழிய செயலில் இல்லை.

மேலும், இவர்கள் மட்டக்களப்பு யாழ்ப்பாண பிரச்சனையை பொறுப்பேற்று தீர்க்க வேண்டும் என்றும் நினைத்துள்ளீர்கள். மிகவும் பயங்கரமான ஒரு வேலை. பிரதேசவாதப் பிரச்சினைகள் ஆயுதமுனையில் தான் ஓரளவு களையப்பட்டது. அதிலும்கூட முழுமையாக இப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் சரியான நியாயங்களை எடுத்துக்கூறிய புத்திஜீவிகள் மறைமுகமாக நாளுக்குநாள் அழிக்கப் படுவதும், தமிழீழ விடுதலைப் புலிகள் கொலைசெய்யப்படுவதும் இப் பிரச்சினை முற்றுமுழுதாக தீர்க்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்து கின்றது. இவ்வாறான நிலைமையில் புலிகள் பக்கம் சார்பானவர்களாகத் தெரிவசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இப் பிரச்சினையை தீர்க்கச் சொல்வதில் என்ன நியாயம் ? ஏனென்றால் மட்டக்களப்பில் தெரிவாகிய தங்கேஸ்வரி கருணாவின் காலப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டவர். பத்மினி வன்னித்தலைமையின் சார்பில் தெரிவுசெய்யப் பட்டவர்கள். இந்தப் பாரிய பொறுப்பை இவர்களிடம் பொறுப்பளிக்கின்றீர்கள். இவர்கள் உயிருடன் வாழ்வது விருப்பமில்லையா?

உங்களுக்குத் தெரியுமா கடந்தமாதம் 22 தமிழரசு கட்சியின் பிரதிநிதிகளை தமிழர் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வன்னியில் சந்தித்தபோது மட்டக்களப்பு மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடுமாறு கூறினார். இதுவரைக்கும் 22பேரும் உரையாட வரவில்லை. நாங்கள் இவர்களை வரவேற்க தயாராக இருந்தோம். ஆனால் தலைவர் சொல்லி வரமுடியாதவர்கள் உங்களின் கதை கேட்பார்களா என்பதில் எனக்கு சந்தேகம் எழுந்தது.

பாஸ்கரன் அவர்களே எப்பவும் 22 உறுப்பினர்களில் இரண்டு பெண் உறுப்பினர் இருந்து ஒன்றையுமே சாதிக்க முடியாது. 20 ஆண்கள் தீர்மானிக்கின்ற தீர்மானங்களுக்கு இவர்கள் துணைபோகலாமே தவிர இவர்களால் தனித்து ஒரு தீர்மானத்தையும் முன்வைக்க முடியாது. இது எப்போது முடியுமென்றால் 22 உறுப்பினர்களில் 9 பிரதிநிதிகளாவது பெண்களாக இருந்தால் மட்டுமே நீங்கள் நினைக்கின்ற பல சேவைகளை ஆற்ற முடியும். இது உங்களின் கவனத்திற்கு மட்டுமல்ல. பாராளுமன்றம் போவதற்கு ஆட்களை தெரிவு செய்யும் தகுதியுடைய அமைப்பினரின் கவனத்திற்கும் இதைக் கொண்டுவருகின்றேன்.

இப்படிக்கு

**N.** ஞானசவுந்தரி, விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை

## பாராளுமன்ற உறுப்பினராக மக்கள் முன் நிறுத்தப்படுபவர்களும் அவர்களை நிறுத்துபவர்களும் ஒன்றுக்கு 100 தடவை யோசிக்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களாக வருபவர்கள் முதலில் நல்லறிவுடன் எங்கும் எப்பொழுதும் நீதிக்காக துணிந்து நிற்கும் ஆற்றல் உடையவர்களாக தங்களுடைய செயற்பாட்டில் இருக்க வேண்டும். அப்போதுதான் அவரை நம்பி வாக்களித்த பல்லாயிரக்கணக்கான மக்களிடம் என்ன வாக்குறுதிகளைச் சொல்லி வாக்குப்பெற்றாரோ அதை அவர்களால் நிறைவேற்ற முடியும். 2003ம் ஆண்டு இத் தேர்தல் காலம் வந்தபோது, யார் இத்தேர்தலில் பங்குகொள்ள வேண்டும் என்ற தீர்மானங்களை தீர்மானிக்கின்றவர்களிடம் தங்களை தீர்மானிக்கும்படி இவர்களிடத்தில் இருந்த 5லொறி மண்ணை 15நாட்களில் காலில் சுமந்தவர்களும் இருக்கின்றார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்குரிய தகுதிகள் ஒருவருக்கு இருந்தால் தானாகவே அவரை அது தேடிவரும் என்பதை இந்த தமிழ் சமூகம் மறந்து அப்படியானவர்களின் பெறுமதியை குப்பையில் வீசுவதுபோல் செயற்படுவது மிகவும் கவலைக்குரியதாக இருக்கின்றது.

இதையும் விட ஒரு பெரிய பகிடி இருக்கின்றது. மட்டக்களப்பு யாழ்ப்பாணம் என்ற பிரதேச வாதம் தேர்தல் அண்மித்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் மத்தியில் மூண்டபோது பாராளுமன்றத்துக்கு பங்குகொள்ள இருந்தவர்கள் மத்தியில் ஒரு பெரிய பதட்டத்தையும் அச்சத்தையும் உருவாக்கியது. எவ்வாறென்றால் மட்டக்களப்பு கருணாவின் பிடியில் இருந்து பறி போகுமா போகாதா? என்று இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதனால் மட்டக்களப்பில் பிரதேசவாதத்தை மையப்படுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும், பொதுக்கூட்டத்திலும் பின்னணியாக நின்று ஆதரவளித்து செயற்பட்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இப்போது இருக்கின்றார்கள். எது சரி எது பிழை என்று தங்களுக்குள்ளே தீர்மானித்துக்கொள்ள முடியாதவர்கள் எப்படி தங்களை நம்பி வாக்களித்த மக்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்பது கேள்விக்குரிய விடயமாகும். கடைசியில் வன்னியில் இருந்து அனுப்பப்பட்ட படைகள் வாகரையைக் தீவிரமாக கைப்பற்றி வருகின்றார்கள் என்று அறிந்தவுடன் கருணாவின் பிடியில் இருந்து தப்பி வன்னிக்கு போகின்றேன் என்று நடித்தவர்களும் இவர்களே. கடந்தகாலங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து மட்டக்களப்பு பிரதேசத்திற்கு வேலை செய்வதற்காக வந்தவர்களுடைய திறமையைப் பார்த்து அவர்களுக்கு மக்கள் ஆதரவளிக்கும்போது அதைக் கண்டு பயந்து 'ஏன் நீங்கள் ஆதரிக்கின்றீர்கள் இவர்கள் யாழ்ப்பாணக்காரர், கொழும்புக்காரர் அல்லவோ? ஏன் மட்டக்களப்பில் வேறு ஆட்கள் இல்லையா?' எனப் பலவிதமான கேள்விகளைக் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு எங்களிடம் கேட்டவர்கள்தான் இன்று விடுதலைப் புலிகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இந்தப் பிரதேசவாதத்தை சுயலாபத்திற்காக, சுயநலப் போக்கிற்காக கையிலே தூக்கிக்கொண்டு திரிந்தவர்கள்தான் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழரசுக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களாக வீற்றிருக்கின்றார்கள்.

எல்லோரும் கூட்டி ஒதுக்கிய பிரதேசவாதக் குப்பைகள் கடைசியில் கருணாவினால் அள்ளப்பட்டது என்பதே உண்மை. இவ்வாறு பார்க்கப்போனால் இந்த பிரதேச வாதத்தை எழுப்பியவர்களில் கருணாவை விட அகோரமான வர்களையும் விடுதலைப் புலிகள் தங்கள் முன்னாலே வைத்துக்கொண்டு செயற்படுகின்றார்கள். இதை இவர்கள் விளங்கவேண்டும் . நான் இந்த தலைவியை சென்றமாதம் (ஏப்ரல், மே) வெளியாகிய செய்திக் கடடையும் ஆக்கங்களையும் பார்த்தவுடன் எனக்கு பெரிய ஒரு சந்தோசமும், நேர்மையான ஒரு துணிவும் என்னை அறியாமலே எழுந்தது. இதனால்தான் இவ்வாறான பிரச்சினைகளும் இருக்கின்றது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயத்தின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். இதையெல்லாம் பார்த்துத்தான் நீங்கள் தேர்தலில் வருபவர்களை தீர்மானிக்க வேண்டுமென்று அன்புடன் கூறி முடிக்கின்றேன்.

இப்படிக்கு

த. சுகி, திருமலைவீதி, மட்டக்களப்பு.

படிப்பகம்

www.padippakam.com



# மட்டக்களப்பு சகோதரிகளின் உணர்வலைகள்.................

## சம்பந்தப்பட்டோர்களுக்கு ஒரு வேண்டுதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லாமே அழிவுநிலையை நோக்குகின்றது

கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான கு. தம்பையா அவர்களின் மரணம் இன்று மட்டக்களப்பின் ஆணிவேர் அறுந்ததற்குச் சமன். சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நிலைக்குரிய மனிதவளங்களை உருவாக்கியவர். பல அரசசார்பற்ற நிறுவனங்களை ஆய்வுகளைச் செய்தவர். திட்டத்தை இன்னொருபடி உயர்த்துவதற்கு மையமாக நின்றவர். இவரின் மரணத்துக்கு இந்த பிரதேசவாதப் பிரச்சினையுடன் தொடர்பு இருக்கு. மட்டக்களப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பாதிப்பும் இல்லாமல் கைப்பற்றிவிட்டோம் என்று சொன்னது பொய் என்பதை புத்திஜீவிகளினதும், தமிழீழ விடுதலைப்புலிகளினதும் உறுப்பினரின் உயிர் இழப்பும் சொல்கின்றது. இது எப்படிச் சென்றாலும் உங்கள் மத்தியில் ஏற்பட்ட முரண் பாடுகளுக்கு பலிக்கடாவாக புத்திஜீவிகளை தயவுசெய்து அழியாதீர்கள். உங்களின் காலில் விழுந்து மன்றாடுகின்றோம். இனிமேல் தமிழர்கள் எவ்வாறான பிழைகளைச் செய்தாலும் மரண தண்டனையை விதிக்கக்கூடாது. இனிமேலும் தமிழரின் அழிவை நாங்கள் ஒருபோதும் சந்திக்கக் கூடாது. **சிங்கள அரசு 21 வருட காலமாக தமிழர் மத்தியில் என்ன விடயங்களை அழிக்கவேண்டும் என்று காலங்காலமாக திட்டமிட்டார்களோ. அவர்களின் திட்டத்தை நாங்களே நிறைவேற்றி வருகின்றோம்.** இதுவரைகாலமும் இந்த யுத்தினால் ஒருலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களின் அழிவுக்கும் 17ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரப் போராளிகளின் அர்த்தமுள்ள மாணத்திற்கும் என்ன பதில் வைத்திருக்கின்றோம் தமிழ் மக்களின் அபிப்பிராயங்களையும், அவர்களின் விருப்பு வெறுப்புக்களையும் தாங்கள் தங்களுடைய போராட்ட நிலைமையினை சேர்த்துக் கொள்ளாமல் தாங்களே நடத்துனர்களாக இருந்து செய்தமைக்கு இது ஒரு பரிசாகப் பெற்றுள்ளீர்கள். இனிமேலாவது சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

இப்படிக்கு

**சி. கோமதி, குறிஞ்சாமுனை,, மட்டக்களப்பு**

## பகட்டுத் துணிவின் பலன் - மரணம்

மட்டக்களப்பு மாவட்டம் இவ்வாறான குழறுபடியான நிலைமைக்கு போவதற்கு ஊடகவிலாளர்களுக்கும் பங்குண்டு. காரணம் புலிகள் இயக்கம் மட்டக்களப்பில் பலாத்காரமாக படித்துக்கொண்டிருந்த தமிழ் பிள்ளைகளை தங்களுடைய அமைப்புக்குள் சேர்த்துக் கொண்டிருந்தபோது மட்டக்களப்பு மக்கள் இருந்த இடங்களையும் விட்டு அவர்களின் தொழில் வளங்களையும் இழந்து துரத்தியடிக்கப்பட்ட போது மட்டக் களப்பில் இருந்த ஊடகவியலாளர்கள் தெரிந்தும் தெரியாதது போல் தங்களது பேனாவை மூடிவைத்திருந்தார்களே. அன்று இவர்களின் நீதி நியாயங்களைத் தட்டிக்கேட்கின்ற துணிவு எங்கே ஓடி மறைந்தது. இன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் மத்தியில் ஏற்பட்ட முரண்பாடுகளை சுட்டிச் சுட்டி எழுதுவதால் மரணம் விளைகின்றது. அன்று சுட்டிக் காட்டி எழுதியிருந்தால் மட்டக் களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் நடவடிக்கையில் பலவிதமான மாற்றங்கள் எழுந்திருக்கும். மக்களும் அந்த மாற்றங்களை கொண்டு வருவதற்காக தாங்கள் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பார்கள். அவ்வாறு ஈடுபட்டால் ஆயிரம் சொந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் கூட அதை வென்றெடுக்க முடியும். மட்டக்களப்பு மாவட்ட மக்களாகிய நாங்கள் இந்த மட்டக்களப்பு ஊடகவியலாளர் களிடம் இந்தக் கேள்வியை இந்தத் தருணத்தில் கேட்கவேண்டிய நிலை வந்துள்ளது.

> அநீதிகளுக்கு குரல்கொடுக்கும் ஊடகவியலாளராக இருக்கவேண்டிய தருணத்தில் இருக்கவில்லையே.

இன்று இவ்வாறு ஒரு பிரச்சினை வரும்போது தற்துணிவாக ஒரே அமைப்பில் இருந்தவர்களுக்கு எதிராகவும், சார்பாகவும் இன்று நீங்கள் எழுதுவதற்கு காரணம் என்ன? நீங்கள் மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு குரல்கொடுக்கும் ஊடகவியலாளராக இருக்கவேண்டிய தருணத்தில் இருக்கவில்லையே. இதை நினைக்கும்போது எங்கள் மனம் துடிதுடிக்கின்றது. எங்களின் பிள்ளைகள் சாதாரண பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளில் பங்குபற்றுவதற்கு ஒருவாரத்திற்கு முன்ரே பிடித்துக்கொண்டு போய்விட்டதால் இரண்டு வருடத்திற்குப் பின்பு வீட்டுக்கு வந்து தன்னுடைய எதிர்காலத்தை இழந்து நிற்கின்ற காட்சியைத்தான் காணமுடிகின்றது. இன்று மட்டக்களப்பு தமிழ் சமுதாயத்தின் கல்வியே பின்னடைவாகி விட்டது. அந்த நேரங்களில் குரல்கொடுக்காத எவரையுமே மட்டக்களப்பு மக்களாகிய நாங்கள் நம்பத் தயாரில்லை. பலாத்காரமாக படை களுக்கு பிள்ளைகளை சேர்க்கின்ற அமைப்பினர் இரண்டு வருடங்களுக்கு மேல் நின்று நிலைத்த சரித்திரமே இல்லை. இதற்கு நல்ல உதாரணமாக ஈஎன்டிஎல்எப், ஈரோஸ், ரெலோ, மட்டக்களப்பு கருணா படை உள்ளன. ஆகவே சம்பந்தப் பட்ட அமைப்பினரே, எங்கேயும் பிள்ளைகளை பலாத்காரமாக பிடிப்பதை கைவிடுங்கள். விரும்பிவந்தால் இணைத்துக் கொள்ளுங்கள். இதை ஏன் சொல்கின்றோம் என்றால் 20, 25 வருடங்களாக பலவிதமான தியாகங்களைச் செய்து வென்றெடுத்த வைரங்களை மங்கலடையச் செய்வதை தமிழ் சமூகமாகிய நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. இது எங்களுடைய மனதில் ஏற்பட்ட காயம். இதற்கு மருந்துபோடுவதற்கு எந்த மருத்துவரும் இல்லை.

இப்படிக்கு

மட்டக்களப்பு பெண்கள்

படிப்பகம்

www.padippakam.com



## ஏப்ரல் மாதம் நிகழ்ந்த வவுனியா அரங்கப் பயிற்சியின் சில காட்சிகள்........

வவுனியாவில் விழுது நிறுவனத்தினர் நடத்திய அரங்கப் பட்டறையில் கலந்து கொண்ட பெண்கள் சிலரின் தோற்றம். இப்பயிற்சியில் முக்கியமாகப் பங்கேற்ற வவுனியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரின் பெயரை சென்ற இதழில் நாம் தவறுதலாக சேர்த்துக் கொள்ளவில்லை. அதற்கு மன்னிப்புக் கோருகின்றோம்.



அரங்கப் பயிற்சியின் இறுதியில் பங்குபற்றுனர்கள் எல்லோரும் வவுனியா சிதம்பரபுர நலன்புரி நிலையத்தில் ஒரு நாடக ஆற்றுகை மேற்கொண்ட காட்சி.



## பெண்களுக்கான அரசியல் எதிர்வு கூறல் போட்டி

அடுத்த பன்னிரு மாதங்களில் இலங்கையின் அரசியல் வானில் என்ன விதமான நிலைமைகள் உருவாகும் என்பதைக் காரண காரியத்துடன் விவரித்து எங்களுக்கு எழுதுங்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, ஜேவிபி, ஹெல உருமய, ஈபிடிபி, புளொட், இத்தியாதி கட்சிகளின் நிலைமையும் எப்படிப் போகும்?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்குமா இல்லையா? தற்போதைய முன்னணி அரசாங்கம் அதனை எப்படி முன்னெடுக்கும்? ஜேவிபி கட்சியின் நிலைப்பாடு இதில் என்னவாக இருக்கலாம்?

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுமா மாட்டாதா? அந்த யோசனைகளில் எவை ஏற்றுக்கொள்ளப்படக்கூடும் எவை நிராகரிக்கப்படலாம்?

அடுத்த தேர்தல்கள் எப்பொழுது வரும்?

**மேலே தரப்பட்ட கேள்விக்களுக்கான பதில்களை உள்ளடக்கி, அடுத்த பன்னிரு மாதங்களில் தோன்றக்கூடிய அரசியல் நிலைமைகளை விவரமாக எதிர்வு கூறும் மிகச் சிறந்த ஆக்கத்திற்கு ஒரு பட்டுச் சேலை அல்லது பட்டுச் சல்வார் முதற் பரிசு காத்திருக்கின்றது!**

*சிறந்த ஆக்கங்களுக்கு ஆறுதற்பரிசு ரூ 1000!*

சென்ற மாத இதழ் யாழ் மாவட்டத்தை காலம் தாழ்த்திச் சென்று கிடைத்த காரணத்தினால் ஆக்கங்களுக்கான முடிவுத் தேதி ஜூன் மாதம் 20, 2004 இலிருந்து ஜூலை மாதம் 31ந் திகதிக்கு பின்போடப்பட்டிருக்கின்றது. பெண்கள் மட்டுமே பங்குபற்றலாம். ஒவ்வொரு ஆக்கமும் கையெழுத்துப் பிரதியெனில் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும், அச்சுப் பிரதியெனில் 12லெ. அளவு எழுத்தில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பவேண்டும்.

அவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:

**தலைவி,**
**49/1 மதவெலிக்கடை வீதி, இராஜகிரிய**
**(வவுனியா முகவரிக்கும் அனுப்பலாம்)**

படிப்பகம்

www.padippakam.com



# நாம் "மனிதவாத"த்தை மறக்கலாமா?...............

கடந்த இதழுக்கு முன்னைய இதழில் பிரதேசவாதம் பற்றி கூறியிருந்திர்கள். நீங்கள் கூறுவதில் உண்மை இருப்பினும் மேலாதிக்கம் பெற்றவர்கள் தங்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களை சீண்டும் போதும், தமக்கும் தம்மை சார்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தம் போதும், பிரதேசவாதம் தோன்றுகின்றது என்று கூட கூறலாம். சென்ற இதழில் சகோதரி பூமகள் கூறியது போல் மற்றயவர்களின் பழக்கவழக்கங்களை, பண்பாடுகளை எள்ளி நகையாடும் போதும், உயர்நிலையில் உள்ளவர்கள் தங்கள் நிலைக்கு கீழ் உள்ளவர்களைத் தாழ்த்தும்போதும் பிரதேசவாதம் தோன்றுகின்றது குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இவ்வாறான பிரச்சனைகளைக் காணலாம். நண்பர்கள் சிலர், வலைப்பந்தாட்ட அணிகளில் யாரும் திறமையானவர்களாக இருப்பினும் 'அந்த' பிரதேச மாணவர்களே கூடுதலாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுவார்கள் தாங்கள் புறக்கணிக்கப் படுவார்கள் என்று மனவருத்தத்துடன் கூறுவார்கள். பிரதேவாதம் இன்று நேற்று உருவாகியது அல்ல. இது காலாகாலமாக பலர் மனதில் புகைந்துகொண்டு இருந்தது கருணா மூலம் சுடர்விட்டு எரியத் தொடங்கியுள்ளது. இருப்பினும் எம்மை இது பற்றி சிந்திக்க வைத்த தலைவிக்கு எமது மனமார்ந்த நன்றிகள். இனவாதம், பிரதேவாதம், மதவாதம் என்று உருவாகக் காரணம் நாம் 'மனிதவாத'த்தை மறந்து மனித நேயங்களை சாகடித்து அதில் இன்பம் காணத்துடிப்பதுதான்.

**தி. காயத்திரி**
**காந்தி சேவை சங்கம்**
**திருமலை**

## உங்கள் கடிதங்கள். . . . .



***"நான் அனுப்புவது கடிதம் அல்ல... என் உள்ளம்"***



## தலைவிக்கொரு பாராட்டு

சென்றமாதம் வெளியாகிய தலைவி பத்திரிகையைப் பார்த்தபோது அதைப் பாராட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை. இலங்கையில் உள்ள மிகவும் நேர்த்தியான பத்திரிகையாக தலைவியைத்தான் பார்க்கிறேன் என்று சொன்னால் அது மிகையாகாது. பக்கச்சார்பு இல்லாமல் எல்லோரின் உணர்வையும் கருத்தையும் வெளியிடும் பத்திரிகையாக தலைவியை நான் பார்க்கின்றேன். வேறு பத்திரிகையென்றால் தங்களுக்கு சாதகமானவற்றை மட்டும் சேர்த்துக்கொண்டு ஏனையவற்றை நிராகரித்துவிடுவார்கள். ஆனால் அதற்கு விதிவிலக்காக உயர்ந்து நிற்கும் தலைவி பத்திரிகையே உன் வளர்ச்சி ஓரிரு மாவட்டத்தில் மட்டுமல்லாது இலங்கையின் எல்லா மாவட்டத்திலும் கொடிகட்டிப் பறக்கப்போவது திண்ணம். இப்படிப்பட்ட தலைவி பத்திரிகையின் ஒரு அங்கத்தவராக சேர எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்குமா? தலைவியின் ஆசிரியருக்கு நேர்மையும், பக்கச்சார்பற்ற தன்மையும், தெளிவும் இருப்பதை மார்ச் மாதப் பத்திரிகையிலும், சென்ற மாதப் பத்திரிகையிலும இருந்து அறிய முடிந்தது. இப்படிப்பட்ட ஒருவரின் சேவை இந்த நாட்டுக்கு மிகவும் முக்கியம் என்பதையும் என்னால் அறிய முடிகிறது.

மட்டக்களப்பு மக்கள் தலைவி பத்திரிகையை பார்த்திருக்கிறார்கள் என்பதையும், அதன் மகிமையை உணர்ந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்களின் செயற்பாட்டில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு தனி மனிதனும் தடாக நிறுவனத்திற்கு வந்து எனக்கு ஒரு தலைவி பத்திரிகை தாருங்கள் என்று தனித்தனியே கேட்டதுடன் இது எங்கிருந்து வருகிறது. இதன் ஆசிரியர் யார் என்றும் கேட்டார்கள். ஒவ்வொரு மாதமும் வரும் தலைவி பத்திரிகையை ஒவ்வொரு இடத்திற்கும் தபாலில் இடும்போது இது பயன்படுகிறதா? என்று எனக்குள் ஒரு வினா வருவதுண்டு. அதற்கான விடை சென்றமாதம் வெளிவந்த தலைவி பத்திரிகைமூலம் நான் அறிந்துகொண்டேன். ஒவ்வொருவரும் தனக்கு ஒரு தலைவி பத்திரிகை வேண்டும் என்று கேட்டபோதே மட்டக்களப்பு மாவட்டத்தில் அப் பத்திரிகையின் பயன்பாடு எவ்வாறு உள்ளதென்பதை அறிந்தேன்.

தலைவியே நீ மிகவும் பெரியவளாகி பலம் வாய்ந்த ஆலமரம்போல் வளரவேண்டும் என்பதோடு, நீயும், உன் ஆசிரியரும் நீடூழி வாழ பிரார்த்தனையுடன் வாழ்த்துகின்றேன்.

**சா. ருத்ரா, காவேரி பெண்கள் அமைப்பு, கோரகல்லிமடு**

**குறிப்பு: உங்கள் பாராட்டுக்களுக்கு நன்றி ருத்ரா. உங்களைப்போலத்தான் ஏராளமான பாராட்டுக்கள் தலைவிக்குக் குவிந்துள்ளன. ஆனால் அவை எமக்குரிய பாராட்டுக்கள் அல்ல. துணிந்து உண்மையை எழுதும் பூமகள் போன்ற சகோதரிகளுக்கே உரித்தானது. அவர்கள் தான் தலைவிக்கு உயிர்க்களை கொடுக்கின்றனர்.**

**சகோதரி ருத்ரா, பெண்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்ற சகல சகோதரிகளும் சகோதரர்களும் தலைவி செய்திமடலின் அங்கத்தவர்கள் தாம். உங்கள் நடவடிக்கைகளைத் தொடருங்கள், அதற்கான சகல ஒத்தாசைகளையும் நாம் மட்டுமல்ல, இந்தச் செய்திமடலுக்கு எழுதுகின்ற வேறு பெண்களும் உங்களுக்குத் தருவார்கள்.**

***எனது அன்பார்ந்த புதுமைத் தலைவிக்கு,***

உங்கள் செய்திமடலை மன்னார் பெண்கள் சங்கம் மூலம் மேமாதம் முதல் நான் பார்த்து வருகின்றேன். இது தரும் சகல செய்திகளும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. ஆனால் எங்கள் கிராமத்தில் உள்ள பெண்கள் இதனை வாசிப்பது கிடையாது. அவர்களில் பலர் படிப்பறிவில்லாதவர்கள் என்பதால் அதிலுள்ள விடயங்களை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. எனவேதான் எங்கள் கிராமத்துப்பெண்கள் விளங்கிக் கொள்ள இலகுவாக படங்கள் மூலம் பெண்களின் பிரச்சனைகள் பற்றிப் பிரசுரிக்க கோரிக்கை விடுக்கிறேன்.

ஏனைய மாவட்டங்களில் இருக்கும் பெண்கள் நிகழ்த்திய சாதனைகள், அவர்கள் எதிர்நோக்கும்பிரச்சனைகள்,அவர்கள் அனுபவிக்கும் அடக்குமுறைகள் இவற்றைப் படம் மூலம் பிரசுரித்தால் கிராமத்தில் உள்ள பெண்கள் விளங்கிக் கொள்கின்ற முறையில் இருக்கும். இதன் மூலம், நாட்டுக்கு நான் என்ன செய்துள்ளேன், என்னுடைய சாதனை என்ன என்பது பற்றி சிந்திப்பார்கள். தங்கள் எண்ணக்கருத்துக்களைத் தலைவிக்கு எழுதுவார்கள். இப்படி சிந்தித்து செயற்பட்டால் சாதனை புரியும் பெண்ணாக மாறுவார்கள். எனவே படம் மூலம் பிரசுரியுங்கள் எனத் திரும்பக் கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவியின் வாசகி**
**கே சுபாஜினி (ராஜி), பாரிகாரி கண்டல், முருங்கன்.**

தொடர்புகளுக்கு : 49/1, மதவெலிக்கடை வீதி, இராஜகிரிய தொ.பே : 2871713 viluthu@sri-lanka.net
அச்சிடுவோர் : ஈகுவாலிடி கிரபிக்ஸ், 315 ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13. தொ.பே : 2389848

படிப்பகம்